
பக்கங்கள் 19+4

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 14 புதன்கிழமை 28.01.2026 | அதிர்வு 182

**யாழ்ப்பாணத்தில்**

## மற்றுமொரு முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர்



யாழ்ப்பாணம் – பண்டத் தரிப்பு இராணுவ முகாமில் இருந்த இராணுவத்தினர் அங்கிருந்து 05

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# ரணிலின் செயலாளரான சமன் விளக்கமறியலில்!

## கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் லண்டன் பயணம் தொடர்பாக விசாரிக்கப்பட்டு வரும் வழக்கில் வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் இன்று கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

இந்நிலையில் விசாரணைகளின் பின்னர் நீதிவான் இந்த விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

முன்னதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளராகப் பணியாற்றிய சமன் ஏக்கநாயக்கவைக் கைது செய்ய பொலிஸ் விசாரணைகள் தொடங்கப்பட்டிருந்தன. 02

# ரணிலுக்கு எதிரான வழக்கு ‘ட்ரயல் அட் பார்’ நீதிமன்றில்



## குற்றச்சாட்டுகள் மார்ச்சில் தாக்கல் இன்று நீதிவான் நீதிமன்றில் தகவல்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீதான விசாரணைகள் ஒரு மாதத்துக்குள் முடிவடையும் என்றும், மார்ச் மாதத்துக்குள் முறையான குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்படும் என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் இன்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளது.

வழக்கின் விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் மார்ச் மாதம் மேல்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட 02

# ஒட்டுசுட்டானில் குடும்பஸ்தர் அடித்துப் படுகொலை!

## பொலிஸார் தீவிர விசாரணை







(பா.சதீசன்)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் கரடிப்புலவு கிராமத்தில் நேற்று இரவு குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மேற்படி குடும்பஸ்தர், இனந்தெரியாத நபரால் தாக்கப்பட்டதில் உயிரிழந்துள்ளார்.

குடும்பத்தைப் பிரிந்து தனிமையில் வசித்து வந்த இந்த நபர், கடைக்குச் சென்று உணவு வாங்கிக் கொண்டு வீடு நோக்கி திரும்பிக் கொண்டிருந்த வேளையில், அவரது தலையின் பின் பகுதியில் தாக்கப்பட்டார் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேற்படி குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், சடலம் இன்று முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அதில், தலையில் ஏற்பட்ட கடும் காயம் காரணமாக வெளியேறிய அதிக இரத்தக்கசிவே உயிரிழப்புக்குக் காரணம் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் பழம்பாசி, கரடிப்புலவு பகுதியைச் சேர்ந்த நாகையா நாகராஜா (வயது 41) என்பவராவார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ரணிலின் செயலாளரான

ரணிலின் துணைவியார் மைத்ரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டன் சென்ற விவகாரம் தொடர்பான விசாரணையில் சமன் ஏக்கநாயக்கவைக் கைது செய்ய சட்டமா அதிபரிடமிருந்து குற்றப் புலனாய்வுத்துறைக்கு அறிவுறுத்தல்கள் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகின்றன.

அதன்படி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்ய சென்ற சந்தர்ப்பத்தில் தமது வீட்டில் சமன் ஏக்கநாயக்க இருக்கவில்லை.

அவர் இன்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

இன்றைய விசாரணைகளின் பின்னர் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

### ரணிலுக்கு எதிரான...

அமர்வு முன் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று சட்டமா அதிபர் தரப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் இசுரு நெத்திகுமார முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, சட்டமா அதிபர் சார்பாக ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் இந்தச் சமர்ப்பணத்தை வழங்கினார்.

முதல் சந்தேகநபரான ரணில் விக்கிரமசிங்க தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன எனவும், இரண்டாவது சந்தேகநபரான சமன் ஏகநாயக்க என்றும் அழைக்கப்படும் சோமிசார பண்டார ஏகநாயக்க மீதான விசாரணைகள் ஒரு மாதத்துக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

மீதமுள்ள விசாரணைகள் முடிவடைந்ததும், திட்டமிட்டபடி மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்றும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

பிணையில் விடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று நீதிமன்றத்தில் பிரசன்னமானார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கிலாந்துக்கு அதிகாரபூர்வமற்ற விஜயம் மேற்கொண்டதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன எனப் புலனாய்வாளர்கள் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தனர்.

இந்தக் கருத்தை நீதிமன்றம் கவனத்தில் கொள்வதாக கொழும்பு கோட்டை நீதிவான் இசுரு நெத்திகுமார தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்துக்குத் தெரிவித்தது. இந்த வழக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மேல் நீதிமன்றம் ஒரு நீதிபதி ஆயத்தைக் கொண்டதாக அமர்வது வழக்கம். ஆயினும் விசேட வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக மூன்று நீதிபதிகளைக் கொண்ட 'ட்ரயல் அட் பார்' (நீதாய விளக்கம்) மேற்கொள்ளப்படுவது உண்டு.

கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வன்கொடுர கொலை வழக்கு, மிருசுவில் படுகொலை வழக்கு, உடத்தல்வின்ன படுகொலை வழக்கு போன்றவை 'ட்ரயல் அட் பார்' மன்றில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.




# பட்ஜட்டை எதிர்க்காத தமிழ்த் தரப்பு கிவுல் ஓயாவை எதிர்த்துக் கூக்குரல்!

## இப்படிக் குற்றஞ்சாட்டுகின்றார் கஜேந்திரகுமார்

2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை எதிர்க்காத தமிழ்த் தரப்பினர், இன்று கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராகக் கூக்குரலிடுகின்றனர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2026 வரவு – செலவுத் திட்டத்தையும், சிங்களக் குடியேற்றத்தையும் நல்லிணக்கம் என்ற போர்வையில் எதிர்க்காத தமிழ்த் தரப்பினர், இன்று கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராகக் கூக்குரலிடுகின்றனர். ஆனாலும், அவர்கள் இன்று எதிர்ப்பு வெளியிடுவதை வரவேற்கின்றோம்.

மகாவலி எல் வலயத்துக்குள்ளேயே கிவுல் ஓயா திட்டமும் வருகின்றது. இந்தக் கிவுல் ஓயா திட்டம் தொடர்பில் அரசியல் இலாபம் எடுத்துக்கொள்வதற்காகவே தமிழரசுக் கட்சி இப்போது எதிர்ப்புத் தெரிவிக்கின்றது. மாகாண சபைத் தேர்தல் வரக்கூடும் என்பதற்காகவே அவர்கள் விழுந்தடித்து நடந்துகொள்கின்றார்கள். ஆகவே, இந்தக் கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னின்று மேற்கொள்ள சிவில் சமூகம் முன்வரவேண்டும். அதனையே நாங்களும் விரும்புகின்றோம். அவ்வாறான சந்தர்ப்பத்தில் எங்கள் ஆதரவும் அதற்கு இருக்கும்." – என்றார்.

# புதிய கணக்காய்வாளர் நாயகமாக தர்மபால கம்மன்பிலவை நியமிக்குக!

## ஜனாதிபதிக்கு மகாநாயக்க தேரர்கள் கடிதம்

புதிய கணக்காய்வாளர் நாயகத்தை நியமிப்பது தொடர்பாக மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்து, கூட்டாகக் கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

இதற்கமைய மூத்த மற்றும் அனுபவம் வாய்ந்த அதிகாரியான தர்மபால கம்மன்பிலவை அப்பதவிக்கு நியமிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தகுதியான ஒருவரைத் தேர்ந்தெடுக்காமல் நீண்டகாலமாக இப்பணியிடம் வெற்றிடமாக இருப்பது பொது நிதி நிர்வாகத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வெளியிலிருந்து ஒருவரை நியமிப்பதற்குப் பதிலாக, உள் கட்டமைப்புக்குள் இருந்தே ஒருவரைத் தெரிவு செய்வது நிறுவனத்தின் ஸ்திரத்தன்மைக்கு உகந்தது என்பது அவர்களின் கருத்தாகும்.


மல்வத்தை மற்றும் அஸ்கிரிய உள்ளிட்ட முக்கிய பீடங்களின் தலைவர்கள் இணைந்து இந்தக் கூட்டு வேண்டுகோளை முன்வைத்துள்ளனர். இதன் மூலம் நாட்டின் நிதி மேற்பார்வையை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர்கள் ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தியுள்ளனர்.



கணக்காய்வாளர் நாயகம் பதவிக்குப் பல மாதங்கள் கடந்தும் இன்னும் ஒருவர் நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்ட பெயரை அரசமைப்பு பேரவை இரு தடவைகள் நிராகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





# சிங்கப்பூர் முன்னாள் வெளிவிவகார அமைச்சருடன் சஜித் பிரேமதாஸ நெருக்கமான கலந்துரையாடல்!

ஆளுகை, பொருளாதார மாற்றம் மற்றும் பொதுக் கொள்கை மறுசீரமைப்பு குறித்து விரிவான கலந்துரையாடல்களை முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்டு, சிங்கப்பூருக்கு ஆய்வுச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சிங்கப்பூரின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜார்ஜ் இயோ-யோங்-பூனைச் சந்தித்தார்.



சிங்கப்பூரில் அமைந்துள்ள லீ குவான் யூ பொதுக் கொள்கைகள் கற்கைகள் நிறுவகத்திலேயே இச்சந்திப்பு இடம்பெற்றது.

முற்போக்கான தலைமைத்துவம், வலுவான நிறுவனங்கள் மற்றும் சான்றுகளின் அடிப்படையிலான கொள்கை உருவாக்கம் மூலம் செயற்கை நுண்ணறிவு, ஆட்டோமேஷன் மற்றும் மேம்பட்ட உற்பத்தி ஆகியவற்றின் தாக்கம் உள்ளிட்ட முக்கிய உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார மாற்றங்களுக்கு சிங்கப்பூர் எவ்வாறு வெற்றிகரமாகத் தகவமைத்துக் கொண்டது என்பது குறித்து இந்தக் கலந்துரையாடலில் இருதரப்பினரும் பிரதானமாக கவனம் செலுத்தினர்.

தனிப்பட்ட பிம்பத்தின் மீது மட்டும் சார்ந்து இல்லாமல் ஈடுகொடுக்கும் கட்டமைப்புகள் மற்றும் பொறிமுறையாள்கைகளை உருவாக்குவதில் சிங்கப்பூரின் அனுபவங்களிலிருந்து நாட்டுக்குப் பாடங்கள் கற்பதன் முக்கியத்துவத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு வலியுறுத்தினார்.

சிங்கப்பூரின் அனைவரையும் உள்ளடக்கிய தேசிய அடையாளம் மற்றும் உலகளாவிய நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் நீண்டகால மூலோபாயத் தொலைநோக்குப் பார்வையை அடைவதற்கான அதன் இயலுமை குறித்தும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டன.

அவ்வாறே, தேசிய பேரிடர்கள் மற்றும் பொருளாதார அதிர்ச்சிகளின் தாக்கங்களை உள்ளடக்கியவாறு இலங்கை சமீப காலங்களில் பல பொருளாதார மற்றும் மனிதாபிமான சவால்களை எதிர்கொண்ட விதம் குறித்து ஜார்ஜ் இயோ பூனுக்கு விளக்கமளித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நிறுவன ஆற்றலை வலுப்படுத்துதல், ஏற்றுமதி சந்தைகளைப் பன்முகப்படுத்துதல், வர்த்தக பேச்சுவார்த்தைகள் மற்றும் வெளிநாட்டுப் பொருளாதார உறவுகள் போன்ற துறைகளில் விசேட நிபுணத்துவ வாண்மையை முன்னேற்றுவதன் அவசியம் என்பனவற்றையும் அவர் எடுத்துரைத்தார்.

மேலும், இச்சந்திப்புக்கு மத்தியில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க, முன்னாள் சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் ஜார்ஜ் இயோ-பூன், பொதுக்கொள்கை முடிவெடுப்பதற்கான எதிர்கால பன்முக பங்குதாரர் பட்டறைகள் மூலம் இலங்கையுடன் நேரடியாகத் தொடர்புபட்டு, சிங்கப்பூரின் அரசாளுகை, பொருளாதார முன்னுதாரண மாற்றம், வெளியுறவுக் கொள்கையின் மூலோபாயம் மற்றும் தொழில்நுட்ப தடைகளை முகாமைத்துவம் செய்வதில் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு இணக்கம் தெரிவித்தார்.

ஜார்ஜ் இயோ, சிங்கப்பூர் அமைச்சரவையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாகச் சேவையாற்றியுள்ளதோடு, தகவல் மற்றும் கலை விவகார அமைச்சு, சுகாதார அமைச்சு, வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சு மற்றும் வெளியுறவு அமைச்சு உள்ளிட்ட பல முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளார்.

இவரது இராஜதந்திரம் மற்றும் பொதுக்கொள்கைக்கான பங்களிப்புகளுக்காக தலைசிறந்த இராஜதந்திரியாகவும், மூலோபாய சிந்தனையாளராகவும் சர்வதேச அளவில் பரவலாக மதிக்கப்படும் ஒருவராகவும் இவர் திகழ்ந்து வருகின்றார்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மற்றுமொரு முகாமில்...**

வெளியேறியுள்ளனர்.

அங்கிருந்து வெளியேறிய இராணுவத்தினர் அராலி இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பண்டத்தரிப்பு கிராம அலுவலர் பிரிவிலுள்ள பிரதேச சபையின் கொல்களம் அமைந்துள்ள இந்தக் காணியானது 2012 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்து வந்தது.

இந்தநிலையில் இந்தக் காணியானது இன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுழிபுரம் பகுதியில் இருந்த இராணுவ முகாமும் அகற்றப்பட்டிருந்தது.

இதனையடுத்து அங்கிருந்த இராணுவத்தினர் சங்கானையில் உள்ள இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




Digital Media Partner முரசு

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உருப்படுமா நாடு?

அரசமைப்புக் கவுன்ஸிலுடன் இணைந்து - இயைந்து - போக முடியாத ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் அதிகாரத் தொனி, கடைசியில் அந்த விடயத்தில் 'குரங்கு அப்பம் பங்கிட்ட கதையாகி' விடுமோ என்ற நிலைமையை உருவாக்கி இருக்கின்றது.

ஒரு பக்கம் எதிரணி மற்றும் அரசமைப்புக் கவுன்ஸிலில் இடம்பெற்றிருக்கும் சுயாதீன சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான இழுபறி. மறுபுறம் ஆளும் தேசிய மக்கள் சக்தி கட்சிக்குள் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா போன்றோரின் தலைமையில் செயல்படும் தீவிரப் போக்காளர்கள். இவற்றுக்கு நடுவில் அல்லாடும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கடைசியாக ஆபத்தான தரப்புகளிடம் சரணடைந்திருக்கிறார் எனத் தோன்றுகின்றது.

எப்போதுமே நாட்டின் அரசியலை பௌத்த - சிங்கள பேரினவாதத் தீவிரப் போக்குக்கு இழுத்துச் செல்லும் மைய விசையாகத் திகழும் மகாநாயக்க தேரர்களிடம் அவர் சாஷ்டாங்கமாக விழுந்திருக்கிறார் என்றுதான் கூற வேண்டும்.

இப்போது அரசமைப்புக் கவுன்ஸிலின் செயற்பாடு தொடர்பில் ஜனாதிபதிக்கு மேலாதிக்க வழிகாட்டல் நிலைப்பாட்டை மகாநாயக்க தேரர்கள் கையில் எடுத்திருக்கிறார்கள்.

கடந்த பத்து மாத காலப்பகுதியில் நிரந்தர கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமிக்க முடியாமை மற்றும் பதில் கணக்காய்வாளர் நாயகத்தின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும் இதுவரை எவரும் நியமிக்கப்படாமை போன்றவை காரணமாக, பல்வேறு தரப்பினர் அரச நிதி மேலாண்மை - முகாமை - குறித்து சர்ச்சைகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் என மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் முன்னெடுக்கும் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்து எதிர்மறையான கருத்துக்களை சமூகமயப்படுத்த சில தரப்பினர் இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தி வருகின்றனர் என மகாநாயக்க தேரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், அரசநிதிமேலாண்மையின் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தும் பாரிய பொறுப்பு வாய்ந்த கணக்காய்வாளர் நாயகம் போன்ற பதவிக்கு, கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்திற்கு வெளியேயுள்ள ஓர் அதிகாரியை நியமிப்பது பொருத்தமற்றது எனவும் அவர்கள் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தில் நீண்டகாலம் பணியாற்றிய அனுபவம் மிக்க சிரேஷ்ட அதிகாரியான தர்மபால கம்மன்பிலவை கணக்காய்வாளர் நாயகப் பதவிக்கு நியமிப்பதே பொருத்தமானது எனவும், அது ஜனாதிபதி முன்னெடுக்கும் நாட்டை வளப்படுத்தும் செயற்திட்டத்திற்கு வலுவூட்டும் எனவும் மகாநாயக்க தேரர்கள் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளனர்.

ஆக, நாட்டின் மிக முக்கிய பதவிகளுக்கு யாரை நியமிப்பது என்பதை ஜனாதிபதிக்கு அறிவுறுத்தும் அளவுக்கு மகாநாயக்கர்கள் - பௌத்த, சிங்களமேலாதிக்கப்பேராளுமையின் ஒட்டுமொத்த வடிவமான மதபீடத்தினர் - வந்து விட்டனர். நாடு இனி உருப்பட்ட மாதிரித்தான்....!



# சவளக்கடை விக்னேஸ்வரா, வாணி பாலர் பாடசாலைகளில் மாணவர்கள் வரவேற்பும் கற்றல் உபகரணங்கள் வழங்கலும்

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

சவளக்கடை விக்னேஸ்வரா மற்றும் வாணி பாலர் பாடசாலைகளின் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும் அவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வும் கடந்த ஞாயிறன்று சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினரும், நளீர் பவுண்டேசன் நிறுவனத்தின் ஸ்தாபத் பணிப்பாளரும், ஐக்கிய மக்கள் முன்னணியின் பிரதித்தலைவருமான எம்.ஏ.நளீர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.



புதிய மாணவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். அவர்களுக்கு தேவையான பாடசாலை புத்தகப் பைகள், அப்பியாச கொப்பிகள் போன்ற கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் முன்னணியின் செயலாளர் யோகநாதன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஜஹான், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.








# வேலோடுமலையில் வேல் பிரதிஷ்டை

( வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு சித்தாண்டி வேலோடு மலை முருகன் ஆலயத்தில் பிரபல நாதஸ்வர சக்கரவர்த்தி ஈழ நல்லூர் பாலமுருகனால் புதிய வேல் அன்பளிப்பு செய்யப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த நிகழ்வு சித்தர்களின் குரல் ஆஸ்தான தலைவர் சிவசங்கர் ஜீ ஏற்பாட்டில் நடைபெற்றது.

வேலோடுமலை தேவஸ்தான ஆதீனகர்த்தா தியாகராஜ சுவாமிகள் முன்னிலையில் மகேஸ்வரன் சுவாமிகள் சகிதம் விசேட பூஜையின் பின்னர் ஊர்வலமாக கொணர்ந்து மூலஸ்தானத்திற்கு பின்னால் 18 சித்தர்களுக்கு முன்னால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த வேல் அன்பளிப்பு நிகழ்வு 210 சித்தர்களை வரவழைக்கும் வேலோடுமலை வேள்வி யாகத்தின் ஒரு பகுதியாக நடைபெற்றது.

நாதஸ்வர வித்துவான் பாலமுருகன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும் நடுநிசியில் நடைபெற்றது.

சித்தர்களின் குரல் அன்பர்களும் பக்தர்களும் கலந்து கொண்டார்கள்.

கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.









# காரைதீவில் களைகட்டிய தைப்பொங்கல் திருவிழா

(வி.ரி. சகாதேவராஜா)

தைத்திருநாளை முன்னிட்டு காரைதீவு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் எந்திரி ஜி. அருணன் தலைமையில் பொங்கல் திருவிழா இன்று புதன் கிழமை கோலாகலமாக இடம்பெற்றது.

கலை கலாசார பாரம்பரிய அறுவடை, புதிர் எடுத்தல், நெல் குற்றி புத்தரிசி எடுத்து பொங்கல் வைக்கும் நிகழ்வுகள் பிரதம அதிதியான அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் முன்னிலையில் நடைபெற்றது.

உழவர் கண்காட்சி மற்றும் பாடசாலை மாணவர்களினால் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை பறைசாற்றும் வண்ணம் நடனங்கள் உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் எஸ்.பிரணவரூபன், கண்ணகி அம்மன் ஆலய தர்மகர்த்தா எஸ். நமசிவாயம், ஓய்வு நிலை உதவி கல்விப் பணிப்பாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா உள்ளிட்ட அதிதிகள் அனைவருக்கும் தமிழர் மாண்பை எடுத்தியம்பும் விதமாக நினைவு சின்னங்கள் மற்றும் நவ தானியங்கள் அடங்கிய பொற்கிழிகள் வழங்கி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில், காரைதீவு பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர் பி. ராஜகுலேந்திரன், மேலதிக மாவட்ட பதிவாளர் திருமதி ஆர். சஜிந்தா, கலாசார உத்தியோகத்தர்களான ஜெயராஜி சுதர்சன் சுரேஷ் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.









# ஏ.ஆதம்பாவா எம்.பி. தலைமையில் இடம்பெற்ற பொத்துவில் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

(கே எ ஹமீட்)

பொத்துவில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இன்று புதன் கிழமை இடம்பெற்றது.

இந்தக் கூட்டம் பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஏ.நஸீல் ஏற்பாட்டில் அபிவிருத்தி குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா தலைமையில் பொத்துவில் பிரதேச செயலக கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை, எம்.எஸ். அப்துல் வாசித், கே.கோடிஸ்வரன், பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எம்.எம்.முஷாரப், கணக்காளர்எஸ். எப்.சபானா, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.எம்.எம்.சப்ரி, உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், முப்படை அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.





# மவுஸ்சாகலை நீர் தேக்கத்தின் கரையோரமுள்ள மாணாபுள் பற்றைக்கு விஷமிகளால் தீ வைப்பு



(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்லோ தோட்ட பகுதியில் உள்ள மவுஸ்சாகலை நீர் தேக்கத்தின் கரையோர பகுதியில் மாணாபுள் பற்றைக்கு இன்று காலை விஷமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சுமார் 10 ஹெக்டையார் மாணாபுள்ளுடன் சேர்ந்து உள்ள டேப்பன்டைன் வனப் பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

இந்தப் பகுதியில் தற்போது கடுமையான வெப்பம் நிலவிவரும் நிலையில், இந்த தீயினால் வனஜீவராசிகள் மற்றும் நீர் ஊற்றுக்கள் அழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த தீ பரவல் குறித்து மஸ்கெலியா பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.





# மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரியில் பரிசோதனை முகாம் இடம்பெற்றது

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில், இவ்வாண்டு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரிசோதனை முகாம் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.பி.ஏ.றாஜி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள் மற்றும் கல்முனை வலயத்திற்குட்பட்ட பல பாடசாலைகளின் மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

மாணவர்களின் செய்முறை அறிவையும் பரீட்சைத் தயார்பாட்டையும் மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த செயற்பாடு, கல்வி வளர்ச்சிக்கான முக்கிய முயற்சியாக அமைந்தது.










# அட்டாளைச்சேனையில் இடம்பெற்ற காணி உரிமைப்பத்திரம் வழங்கும் நிகழ்வு

(நவாஸ்)

அட்டாளைச்சேனையில் நீண்ட காலமாக அரச காணிகளில் குடியிருந்தவர்களுக்கும், விவசாயம் செய்கையில் ஈடுபட்டுவருபவர்களின் காணிகளுக்கும் காணி உரிமைப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் அஹமட் அப்கர் தலைமையில் நேற்று இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக மாவட்ட செயலாளர் சித்தகே அபேவிக் ரம, மேலதிக மாவட்ட செயலாளர் எஸ். ஜெகராஜன் உதவிப் பிரதேச செயலாளர் எப். நஹீஜா முஸபிர் மற்றும் காணி உத்தியோகத்தர் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள், காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள். பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.









# அட்டாளைச்சேனையில் இடம்பெற்ற ‘கலைஞர் சுவதம்’ விருது வழங்கல்

(நவாஸ்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் கலைஞர்களை கௌரவிக்கும் “கலைஞர் சுவதம்“ விருது வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனையில் நேற்று இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் ஏ.சி.அஹமட் அப்கர் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மூன்று கலைஞர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபே விக்ரம, மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன், உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹறிஜா முஷாபிர் , பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஜெபர், சமூர்த்தி தலைமை முகாமையாளர் ஹமீட், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம். றின்சான், அட்டாளைச்சேனை கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜாயா , மற்றும் காரியலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.








# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் 147 மில்லியன் ரூபாவில் வேலைத்திட்டம்

## அபூபக்கர் ஆதம்பாவா எம்.பி. தகவல்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டில் 147 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டில் ஏற்பட்ட டித்வா புயல் காரணமாக மக்கள் மிகமோசமாக பாதிக்கப்பட்டதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். இந்த நிலையில் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பணியை ஜனாதிபதி பல நாடுகளோடு பேசி முன்னெடுத்து வருகிறார்.

நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய கடமைப்பாடு அரசாங்கத்திற்கு உள்ளது. இன,மத, மொழி மற்றும் பிரதேச வேறுபாடுகள் இல்லாமல் இலங்கை மக்கள் என்ற ரீதியில் நாம் சேவையாற்றி வருகின்றோம். 2026 ஆம் ஆண்டிலும் இங்கு வாழும் மக்களின் தேவைகளை முன்னிலைப்படுத்தி கல்வி, போக்குவரத்து, காணி, வீட்டுத்திட்டம், விவசாயம் என பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.” என்று தெரிவித்தார்.

இந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கவீந்திரன் கோடீஸ்வரன், எம்.எஸ். உதுமாலெப்பை, எம்.எஸ்.அப்துல் வாசித் உட்பட நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் இ.ரூபசாந்தன், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராஜா மற்றும் திணைக்களத் தலைவர்கள், உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.





# பொலிஸ் மா அதிபர் உள்ளிட்டோருக்கு மனித உரிமை ஆணைக்குழு அழைப்பு




பொலிஸ் மா அதிபர் மற்றும் நான்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இரத்தினபுரி அலுவலகத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பான விசாரணைக்காகவே அழைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் மா அதிபர் , இரத்தினபுரி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், எம்பிலிபிட்டிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், எம்பிலிபிட்டிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் எம்பிலிபிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

சூரியகந்த பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி, தற்போது பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஹெட்டியாராச்சிகே சுசந்த வீரசிங்க என்பவரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமாரவைத் தாக்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே மேற்படி உத்தியோகத்தர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள், தனது அரசமைப்பு ரீதியான அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தீர்வு கிடைக்கவில்லை என்றால் தொழிற்சங்க நடவடிக்கை தீவிரம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை




தமது பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உடனடியாகத் தீர்வுகளை வழங்கத் தவறினால், தொழிற்சங்க நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்துவது குறித்த தீர்மானத்தை அறிவிக்கப் போவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்று நடைபெறவுள்ள சங்கத்தின் மத்திய செயற்குழு கூட்டத்திற்குப் பிறகு, முன்னெடுக்கப்படவுள்ள மேலதிக தொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்பட்டு பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என சங்கத்தின் செயலாளர் மருத்துவர் பிரபாத் சுகததாச தெரிவித்தார்.

கடந்த திங்கள் கிழமை காலை முதல் 5 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

வெளிநோயாளி பிரிவுகளில் தட்டுப்பாடாக உள்ள மருந்துகளை வெளி மருந்தகங்களில் கொள்வனவு செய்வதற்கான மருந்துச் சீட்டுகளை வழங்க மறுப்பது உள்ளிட்ட விடயங்களுக்காக போராட்டங்களை மருத்துவர்கள் தற்போது முன்னெடுத்து வருகின்றனர்.

அரசாங்கத்தின் பதிலைப் பொறுத்தே அடுத்தகட்டப் போராட்டங்களின் வீரியம் அமையும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.





# மகாராஷ்டிர துணை முதல்வர் விமான விபத்தில் உயிரிழப்பு

## 3 நாள்கள் துக்கம் அனுஷ்டிப்பு

தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவரும் மகாராஷ்டிர துணை முதல் வருமான அஜித் பவார், இன்று காலை இடம்பெற்ற விமான விபத்தில் உயிரிழந்துள்ளார்.

மும்பையில் இருந்து பாராமதிக்கு விமானத்தில் சென்று கொண்டிருந்தபோது விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் விமானிகள் மற்றும் பவாரின் பாதுகாப்புப் பணியாளர்கள் உட்பட மேலும் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

காலை 8 மணியளவில் மும்பையில் இருந்து புறப்பட்ட சிறிய விமானம், ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் தரையிறங்கும் முயற்சியின் போது பாராமதி விமான நிலையம் அருகே விபத்துக்குள்ளானது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னதாக நான்கு முக்கியமான பொதுக் கூட்டங்களில் பவார் கலந்து கொள்வதற்காக இந்தப் பயணத்தை மேற்கொண்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்து குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

66 வயதான அஜித் பவார், மூத்த அரசியல்வாதியும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் நிறுவனருமான சரத் பவாரின் மருமகன், மக்களவை எம்.பி. சுப்ரியா சுலேவின் உறவினர் ஆவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவரது மறைவை அடுத்து மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ்,

“நாங்கள் இன்று பொது விடுமுறையை அறிவிக்கிறோம். அதோடு, மூன்று நாட்களுக்கு அரசு துக்கம் அனுசரிக்கப்படும். அஜித் பவாரின் மறைவு ஒட்டுமொத்த மகாராஷ்டிராவுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

கடினமாக உழைக்கக்கூடிய தலைவராக அஜித் பவார் இருந்தார். எந்த ஒரு தருணத்திலும் அவர் நிலை தடுமாறியது கிடையாது. இது மகாராஷ்டிராவுக்கு கடினமான தினம். அவரைப் போன்ற ஒரு தலைவர் உருவாக நீண்ட காலம் ஆகும். மகாராஷ்டிராவின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய பங்களிப்பை அளித்தவர் அவர். அவரது மறைவு எனக்கு தனிப்பட்ட இழப்பு. நான் எனது நண்பரை இழந்து விட்டேன். அவரது குடும்பத்துக்கு இது மிகப் பெரிய இழப்பு.

நானும் துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவும் விரைவில் பாராமதி செல்ல உள்ளோம். பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் தொலைபேசி மூலம் என்னிடம் பேசினர். தங்கள் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்தனர். மகாராஷ்டிரா முழுவதும் இது சோக அலையை ஏற்படுத்தி உள்ளது.

நான், சுப்ரியா சூலேவிடம் (சரத் பவாரின் மகள்) பேசினேன். அஜித் பவார் மகன் பார்த்தா பவாரிடமும் பேசினேன். நாங்கள் பாராமதி சென்றதும் குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசி, இறுதிச் சடங்கு குறித்து முடிவெடுப்போம்” என தெரிவித்தார்.



# இந்தியாவில் நிபா வைரஸ் பரவல் தொடர்பில் விளக்கமளித்துள்ள மத்திய சுகாதார அமைச்சு



இந்தியாவின் கிழக்கு மாநிலமான மேற்கு வங்கத்தில் நிபா வைரஸ் பாதிப்பு குறித்து நிலவி வந்த அச்சத்தைத் தணிக்கும் வகையில், மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சு முக்கிய விளக்கத்தை அளித்துள்ளது.

இதன்படி மேற்கு வங்கத்தில் இதுவரை 2 பேருக்கு மட்டுமே நிபா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்த 196 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த தொற்று காரணமாக தாய்லாந்து, நேபாளம், தாய்வான் மற்றும் ஹொங்கொங் ஆகிய நாடுகள் மேற்கு வங்கத்திலிருந்து வரும் பயணிகளுக்கு விமான நிலையங்களில் மருத்துவப் பரிசோதனைகளைத் தொடங்கியுள்ளன.

நிபா ஒரு விலங்குவழித் தொற்று ஆகும். அதாவது, இது விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவக்கூடியது. முதன்மையாக பழம் தின்னும் வௌவால்கள் மூலம் பரவுகிறது.

மேலும் பன்றிகள், நாய்கள், ஆடுகள் மற்றும் குதிரைகள் போன்ற விலங்குகளுக்கும் இது பரவக்கூடும். வௌவால்களின் எச்சில் அல்லது கழிவுகள் படிந்த பழங்கள் போன்றவற்றை உட்கொள்வதன் மூலம் மனிதர்களுக்குப் பரவுகிறது. பாதிக்கப்பட்ட நபரின் உடல் திரவங்கள் மூலம் ஒரு மனிதரிடமிருந்து மற்றொருவருக்கு இது பரவ வாய்ப்புள்ளது.

இந்தநிலையில் காய்ச்சல், வாந்தி, தலைவலி மற்றும் வலிப்பு போன்றவை ஏற்படலாம். தொற்று ஏற்பட்ட 4 முதல் 21 நாள்களுக்குள் அறிகுறிகள் தென்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைரஸிற்கு இதுவரை தடுப்பூசி கண்டறியப்படவில்லை.

இந்தியாவின் தென்பகுதியான கேரளா, 2018 முதல் 2025 வரை சுமார் ஒன்பது முறை இந்த வைரஸ் பாதிப்பை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி மேற்கு வங்கத்தில் உள்ள சுற்றுலாப் பயணிகள் அல்லது பொது மக்கள் இது குறித்து ஏதேனும் உதவி தேவைப்படின் உள்ளூர் பொலிஸ் அல்லது சுகாதாரத் துறையினரை அணுகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# திரையில் நடித்த விஜய் அரசியலில் மோடியுடன் இணைந்து நடிக்கிறார்

## சபாநாயகர் அப்பாவு தெரிவிப்பு



திரையில் நடித்த விஜய் அரசியலில் மோடியுடன் இணைந்து நடித்து வருகின்றார் என தமிழக சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு தெரிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், “மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 234 எம்.எல்.ஏக்கள் கொண்ட சபையில், மரபுப்படி தயாரித்துக் கொடுத்த உரையை வாசிப்பதுதான் ஆளுநரின் கடமை. ஆனால், அவர் அதைச் செய்யாமல் வெளியேறியது மரபல்ல.

ஆளுநரின் நடவடிக்கை தனிப்பட்ட முடிவல்ல, அவர் யாரோ ஒருவரின் கைப்பாவையாகச் செயல்படுகிறார். அ.தி.மு.க – பா.ஜ.க. கூட்டணியில் அன்புமணி 10 சதவீத ஒதுக்கீடு வேண்டும் என்கிறார், டி.டி.வி. தினகரன் இட ஒதுக்கீட்டை எதிர்க்கிறார், எடப்பாடி பழனிசாமியால் என்ன செய்ய முடியும், இந்தக் கூட்டணி ஓர் ஒவ்வாத கூட்டணியாகும்.

வட இந்தியாவில் இஸ்லாமிய வாக்குகளைப் பிரிக்க ஒவைசியை பா.ஜ.க. பயன்படுத்துவது போல, தமிழகத்தில் சிறுபான்மையினர் மற்றும் தி.மு.க. எதிர்ப்பு வாக்குகளைப் பிரிக்க விஜய்யைப் பயன்படுத்துகிறது பா.ஜ.க. விஜய்யும் – மோடியும் சேர்ந்து திட்டமிட்டு நடத்தும் நாடகம் தான் இது, திரைப்படத்தில் நடிப்பதை விட்டுவிட்டு விஜய் அரசியலில் மோடியுடன் சேர்ந்து நடிக்கிறார்.” என்று தெரிவித்துள்ளார்.

# தென்கொரியாவின் முன்னாள் முதல் பெண்மணிக்கு ஊழல் வழக்கில் 20 மாத சிறைத்தண்டனை விதிப்பு



தென்கொரியாவின் முன்னாள் முதல் பெண்மணி கிம் கெயான் ஹீக்கு சர்ச்சைக்குரிய 'Unification Church' அமைப்பிலிருந்து லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக 20 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை வரையான காலப்பகுதியில், அரசியல் மற்றும் வணிகச் சலுகைகளுக்காக குறித்த மத அமைப்பிடமிருந்து வைரம் மற்றும் 'Chanel' கைப்பைகள் உள்ளிட்ட 80 மில்லியன் வொன் பெறுமதியான பொருள்களை லஞ்சமாக பெற்ற குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

பதவி உயரும்போது நடத்தையில் அதிக கவனம் தேவை. ஆனால் பிரதிவாதி தனது பதவியைத் தனிப்பட்ட லாபத்திற்காகத் தவறாகப் பயன்படுத்தியுள்ளார் என நீதிபதி வூ இன்-சுங் சுட்டிக்காட்டினார்.

பங்குச் சந்தை மோசடி மற்றும் தேர்தல் தொடர்பான ஏனைய குற்றச்சாட்டுகளிலிருந்து 52 வயதான கிம் கெயான் ஹீயை நீதிமன்றம் விடுவித்துள்ளது.

20 மாத சிறைத்தண்டனையுடன், 12.85 மில்லியன் வொன் பணத்தை மீளச் செலுத்தவும், வைர நெக்லஸை பறிமுதல் செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிம் கெயான் ஹீயின் கணவரும் முன்னாள் ஜனாதிபதியுமான யூன் சுக் இயோல், ஏற்கனவே இராணுவச் சட்டத்தைக் கொண்டுவர முயன்ற குற்றத்திற்காக 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றுள்ளார்.

தென்கொரிய வரலாற்றில் முன்னாள் ஜனாதிபதி தம்பதி ஒரே நேரத்தில் சிறைத் தண்டனை பெறுவது இதுவே முதல் முறையாகும்.

லஞ்ச ஊழல் தவிர, கிம் கெயான் ஹீ தனது முதுகலை பட்டப்படிப்பு ஆய்வுக் கட்டுரையைத் திருடி எழுதினார் என குற்றம் சாட்டப்பட்டு, அவரது கல்விப் பட்டம் கடந்த ஆண்டு ரத்து செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலில் பொதுத் தேர்தலை தள்ளிப் போடுகிறார் நெதன்யாகு

இஸ்ரேலில் பொதுத் தேர்தலை நடத்துவது ஒரு பெரிய தவறு என்று அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் வரவு - செலவு திட்டம் மீதான முதல் வாக்கெடுப்பு நடைபெற உள்ளது.

நெதன்யாகுவின் கூட்டணி அரசு, முன்னாள் கூட்டணிக் கட்சிகளின் நிச்சயமற்ற ஆதரவை நம்பியே பெரும்பான்மையைச் செலுத்தி வருகிறது.

"நிச்சயமாக நான் கவலையடைந்துள்ளேன். நாம் மிகவும் உணர்ச்சிகரமான சூழலில் இருக்கிறோம் என்று நினைக்கிறேன்," என செய்தியாளர் சந்திப்பில் நெதன்யாகு கூறினார்.

மார்ச் 31 ஆம் திகதிக்குள் வரவு - செலவு திட்டத்தை நிறைவேற்றப்படாவிட்டால், தானாகவே முன்கூட்டிய தேர்தல் அறிவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.




1996 முதல் பல்வேறு காலகட்டங்களில் 18 ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்ரேலின் பிரதமராகப் பணியாற்றிய நெதன்யாகு, மிக நீண்ட காலம் பதவியில் இருந்தவர் என்ற சாதனையைப் படைத்தவர்.

எதிர்வரும் நவம்பரில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், மீண்டும் போட்டியிடப் போவதாக அவர் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

நெதன்யாகுவின் தற்போதைய பதவிக்காலம் பல்வேறு சவால்களைச் சந்தித்து வருகிறது.

இவரது சர்ச்சைக்குரிய நீதித்துறை சீர்திருத்தத் திட்டத்திற்கு எதிராகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடினர்.

ஒக்டோபர் 7, 2023 முதல் நடைபெற்று வரும் காசா போர் கையாளுதல் குறித்து உள்நாட்டில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் "இப்போது நமக்குத் தேவை தேர்தல் அல்ல. இந்த ஆண்டின் இறுதியில் தேர்தலைச் சந்திக்கலாம், ஆனால் தற்போது அதைச் செய்வது தவறானது" என்று நெதன்யாகு மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.



# சண்ட்ரா புயல் காரணமாக இங்கிலாந்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன

## போக்குவரத்துக்கும் பாதிப்பு

சண்ட்ரா புயல் காரணமாக இங்கிலாந்து முழுவதும் ஏற்பட்டுள்ள கடுமையான வெள்ளப்பெருக்கு காரணமாக போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து மற்றும் வேல்ஸ் ஆகிய பகுதிகளில் பலத்த காற்றுடன் பெய்த மழையினால் ரயில், விமானம் மற்றும் படகு போக்குவரத்துகள் பெருமளவில் ரத்து செய்யப்பட்டுள்ளன.

நூற்றுக்கணக்கான வெள்ள அபாய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ள நிலையில், சோமர்செட் மற்றும் டெவன் போன்ற இடங்களில் பல வீடுகள் நீரில் மூழ்கி பெருமளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

மிகக் குறுகிய காலத்தில் பெய்த வரலாறு காணாத மழையினால் ஆறுகளில் நீர்மட்டம் உயர்ந்து, வீதிகள் மூடப்பட்டு பாடசாலைகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மோசமான வானிலை காரணமாக மக்கள் பயணங்களைத் தவிர்க்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளதோடு, மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் ஆயிரக்கணக்கான வீடுகள் இருளில் மூழ்கியுள்ளன.

அடுத்தடுத்த புயல்களின் தாக்கத்தால் நிலத்தடி நீர்மட்டம் ஏற்கனவே உயர்ந்துள்ள நிலையில், தற்போதைய பனிப்பொழிவு மற்றும் பனிக்கட்டி அபாயங்கள் நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளன.







பக்கங்கள் - 04

கனடா முரசு

புதன்கிழமை 28/01/2026

## டொரோண்டோவில் குவிந்துள்ள பனியை அகற்றுகின்ற நடவடிக்கைகள் ஆரம்பம்



C4




# கனடா என்றும் தமிழ் மக்களுக்கு உறுதியான ஆதரவை வழங்கும்

## பொது பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு



கனடா எப்பொழுதும் தமிழ் மக்களுக்கு உறுதியான ஆதரவை வழங்கும் என்றும் தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்காக சர்வதேச ரீதியில் குரல் கொடுக்கும் எனவும் கனடாவின் பொது பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

கனடிய நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தமிழ் மரபுத்திங்கள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

C4

# கனடாவில் புகலிடக்கோரிக்கையாளர்களின் மருத்துவக் கட்டணம் தொடர்பில் புதிய விதி

கனடாவில் மே மாதம் முதல் அகதிகளுக்கும் புகலிடக்கோரிக்கையாளர்களுக்கும் மருத்துவக் கட்டணம் தொடர்பில் ஒரு புதிய விதி அறிமுகமாக உள்ளது.

மே மாதம் 1 ஆம் திகதி முதல், கனடாவில் வாழும் அகதிகளும் புகலிடக் கோரிக்கையாளர்களும் மருத்துவக் கட்டணங்களில் ஒரு பகுதியை செலுத்த வேண்டியிருக்கும்.

மே மாதம் 1 ஆம் திகதி முதல், அகதி



களும் புகலிடக்கோரிக்கையாளர்களும், பல் மருத்துவம், கண் மருத்துவம் மற்றும் பிசியோதெரபி போன்ற சிகிச்சைகளுக்கான கட்டணங்களில் 30 சதவிகிதமும், ஒவ்வொரு மருந்துச்சீட்டுக்கும் 4 டொலர்களும் செலுத்தவேண்டியிருக்கும்.

இந்த விதியால், அகதிகளுக்கும் புகலிடக்கோரிக்கையாளர்களுக்கும் சிகிச்சை கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம் அல்லது மருத்துவ உதவியே கிடைக்காமல் போகவும் வாய்ப்புள்ளது என விமர்சனங்கள் எழுந்துள்ளன.

















# கனடியத் தமிழர் பேரவையின் 19ஆவது ஆண்டு தைப்பொங்கல்

கனடியத் தமிழர் பேரவை தனது 19ஆவது ஆண்டு தைப்பொங்கல் மற்றும் தமிழ் மரபுத் திங்கள் இரவு விருந்தினை கடந்த 24ஆம் திகதி மார்கம் நகரில் உள்ள ஹில்டன் மார்கம் மாநாட்டு மையத்தில் நடத்தியது.

தமிழர் பண்பாடு, மரபு மற்றும் சமூக முன்னேற்றத்தை கொண்டாடும் வகையில், இந்த நிகழ்வு நடைபெற்றது. சமூக உறுப்பினர்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் பெருமளவில் இதில் கலந்து கொண்டனர்.

மத்திய, மாகாண மற்றும் நகராட்சி அரசுகளின் பிரதிநிதிகள் விழாவில் கலந்து கொண்டு தைப்பொங்கல் மற்றும் தமிழ் மரபுத் திங்களை தமிழ்சமூகத்துடன் இணைந்து கொண்டாடினர்.

கனடா அரசின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் டொராண்டோ நகரின் முன்னாள் காவல் தலைவர் பில் பிளேர் வாழ்த்துரை வழங்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜுவானிட்டா நாதன் உரையாற்றிய போது, இந்தியா மற்றும் இலங்கைக்கு மேற்கொண்ட தனது சமீபத்திய பயணங்களை நினைவுகூர்ந்தார். அண்மைய வெள்ளப் பெருக்குகளால் பாதிக்கப்பட்ட இலங்கையின் மலையகத் தமிழ் சமூகங்கள் எதிர்கொண்டு வரும் சவால்களை அவர் எடுத்துரைத்தார். நிவாரணம் மற்றும் நீண்டகால மீளமைப்பு பணிகளில் தமிழ் புலம்பெயர் சமூகத்தின் பங்கு முக்கியமானது எனவும் அவர் வலியுறுத்தினார்.

இவ்விழாவின் போது சிறப்பான சேவை மற்றும் தலைமைத்துவத்திற்கு உரியவர்களை கனடியத் தமிழர் பேரவை கௌரவித்தது.

மார்கம் நகர மேயர் பிராங்க் ஸ்கார்பிட்டி தமிழ்சமூகத்திற்கு தொடர்ந்து வழங்கி வரும் ஆதரவினை மதித்து 'Leaders for Change' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். மனித உரிமைகள் தொடர்பான நீண்டகால அர்ப்பணிப்பு மற்றும் செயற்பாடுகளை பாராட்டி நாடாளுமன்ற உறுப்பினர் கார்னெட் ஜீனிஸுக்கு 'Service Excellence' விருது வழங்கப்பட்டது.

தொடர்ச்சி▼







# கனடியத் தமிழர் பேரவையின் 19ஆவது ஆண்டு தைப்பொங்கல்

தொடர்ச்சி▲

விழாவில் உரையாற்றிய சிறப்பு விருந்தினர்கள் முக்கிய கருத்துகளை முன்வைத்தனர். இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், உலகளாவிய தமிழர் ஒற்றுமையின் அவசியம் குறித்து உரையாற்றினார்.

முக்கிய உரையாளராக கலந்து கொண்ட Prisoner #1056 நூலின் ஆசிரியர் ராய் ரத்னவேல் தமிழ் இளைஞர்களின் எதிர்காலம் மற்றும் அடுத்த தலைமுறையை வழிநடத்த வேண்டிய சமூகப் பொறுப்பு குறித்து சிந்தனையைத் தூண்டும் உரையை வழங்கினார்.

கனடியத் தமிழர் பேரவையின் இலங்கைக்கான மனிதாபிமான ஒருங்கிணைப்பாளர் துஷ்யந்தன் ஆர். துரைரத்னம், இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்காக கனடிய தமிழர் பேரவை மேற்கொண்டு வரும் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி பணிகள் குறித்து விளக்கினார்.

தமிழர் கலை மற்றும் பண்பாட்டை பிரதிபலிக்கும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன. நிரோ நடனக் கலைஞர்கள் அமைப்பைச் சேர்ந்த திருமதி நிரோதினி பரராஜசிங்கத்தின் மாணவிகள் வரவேற்பு நடனத்தை வழங்கினர். கலாமன்றம் நுண்கலை மற்றும் யோகா அகாடமியைச் சேர்ந்த குரு நிரஞ்சனா சந்த்ருவின் மாணவிகள் பாரம்பரிய பாரதநாட்டிய நிகழ்ச்சியை அரங்கேற்றினர். Centre for Leadership and Innovation அமைப்பின் மாணவர்களும் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர்.

அதுமட்டும் அல்லாது நிகழ்வின் முக்கிய அம்சமாக முல்லை கைத்தெறி ஆடை அணிவகுப்பு நடைபெற்றது. இலங்கையின் புதுக்குடியிருப்பு பகுதியில் போரால் பாதிக்கப்பட்ட பெண்களால் தயாரிக்கப்பட்ட முல்லை திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட கைத்தறி ஆடைகள் இதில் காட்சிப்படுத்தப்பட்டன.

கனடியத் தமிழர் பேரவையின் தலைவர் குமார் ரத்னம் அவர்கள் உரையாற்றும் போது, தைப்பொங்கலும் தமிழ் மரபுத் திங்களும் கடந்த காலத்தை நினைவுகூர்வதற்காக மட்டுமல்ல் எதிர்காலத்தை உருவாக்கும் பொறுப்பையும் நினைவூட்டும் காலமாகும் எனக் குறிப்பிட்டார். பணிவுடன் சேவை செய்து, நேர்மையுடன் வழிநடத்தி, சமூகமாக ஒன்றிணைந்து வளர்வதே பேரவையின் உறுதி என அவர் தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாது 2026 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள கனடியத் தமிழர் பேரவையின் தமிழ் கனடிய நடைபயணம் தமிழ் சமூக மையத்திற்கான ஆதரவாக நடத்தப்படும் எனவும் இதன்போது அறிவிக்கப்பட்டதுடன் விழாவின் தலைமை அனுசரணையாளர்களான சுதர்ஷன் பரமசாமி குடும்பத்தினர், தமிழ் சமூக மையத்திற்கு வழங்க முன்வந்த 500,000 டொலர் நன்கொடை உறுதியும் நிகழ்வின் போது நினைவூட்டப்பட்டது.

இந்த விழா வெற்றிகரமாக நடைபெற உதவிய அனைத்து அரசியல் பிரதிநிதிகள், விருந்தினர்கள், அனுசரணையாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் கனடியத் தமிழர் பேரவை தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளது.



















# தென் ஒன்டாரியோவில் 3.7 ரிக்டர் நிலநடுக்கம்

கனடாவின் தென் ஒன்டாரியோ பகுதியில் 3.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதாக இயற்கை வள அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் இரவு சரியாக 10.59 மணிக்கு பதிவாகியதாக கனடிய நிலநடுக்க ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் மையப்பகுதி, ஒரிலியா நகரத்திலிருந்து தென்கிழக்கே சுமார் 23 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.




நிலநடுக்கம் 5.0 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் இதுவரை எந்த சேதமும் ஏற்பட்டதாக தகவல் இல்லை. மிதமான அளவில் மட்டுமே உணரப்பட்டது என இயற்கை வள அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இரவு 11 மணியளவில் நில அதிர்வும் குலுக்கமும் உணர்ந்ததாக பிராந்தியத்தின் பல பகுதிகளில் இருந்து மக்கள் சமூக ஊடகங்களில் பதிவுகள் வெளியிட்டு வருகின்றனர்.

சிலர் ஒரு பெரும் சத்தம் கேட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

# டொரோண்டோவில் குவிந்துள்ள பனியை அகற்றுகின்ற நடவடிக்கைகள் ஆரம்பம்



டொரோண்டோ நகரத்தை தாக்கிய பாரிய பனிப்புயலைத் தொடர்ந்து குவிந்துள்ள பெருமளவு பனியை அகற்றுவதற்காக, விரைவில் குடியிருப்பு வீதிகளில் டம்ப் லொறிகள் இயக்கப்படவுள்ளன என நகர நிர்வாகம் அறிவித்துள்ளது.

மருத்துவமனை வளாகங்களில் பனி அகற்றும் பணிகள் ஏற்கனவே தொடங்கியுள்ளதாகவும், அடுத்த கட்டமாக பொது போக்குவரத்து நிறுத்தங்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றன என நகர மேயர் ஒலிவியா சௌ தெரிவித்துள்ளார்.

நகரம் முழுவதும் பனி அகற்றும் பணிகள் புதன் கிழமை முதல் தொடங்கும் என நகர நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்த மாதத்தில் ஏற்பட்ட இரண்டு பனிப்புயல்களால் சில பகுதிகளில் சுமார் 90 சென்ரி மீற்றர் பனி குவிந்துள்ளதால், இந்தப் பணிகள் மிகப் பெரிய சவாலாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு பெப்ரவரியில் டொரோண்டோ நகரை முடக்கி வைத்த மூன்று தொடர் பனிப்புயல்களை விடவும் இந்த முறை பனிப்பொழிவு அதிகமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குவிந்துள்ள பனியை அகற்றும் பணிகளை பூர்த்தி செய்வதற்கு சில காலம் தேவைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கனடா என்றும்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

“இங்கு வந்திருக்கும் அனைவருக்கு எனது வாழ்த்துக்கள் மற்றும் நன்றிகள். கடந்த 10 வருடங்களாக நாங்கள் கனடிய நாடாளுமன்றத்தில் தமிழ் மரபுத்திங்கள் விழாவை நடத்தி வருகின்றோம்.

இந்த விழாவில் பலர் பலதடைவைகள் வந்திருக்கின்றீர்கள். நீங்கள் ஒவ்வெருவரும் இவ்வொரு பகுதியிலிருந்தும் உங்கள் சேவைகளை எங்களுக்கு செய்து வருகின்றீர்கள். தமிழ் மக்களின் குரல் இந்த நாடாளுமன்றில் ஒலிக்கின்றது என்றால் அதற்கு நீங்கள்தான் காரணம். நாங்கள் உங்களுடன் இணைந்து வேலை செய்கின்றோம். உங்களால்தான் நாங்கள் இங்கு இருக்கின்றோம். அதற்கான நாங்கள் உங்களுக்கு நன்றி கூற விரும்புகின்றோம்.

தமிழ் மக்கள் சுமார் 60 இற்கு மேற்பட்ட வருடங்களாக கனடா எங்கள் நாடு என்று கூறி வருகின்றோம். நாங்கள் தாயகத்திலிருந்து வந்தாலும் எமது எதிர்கால தலைமுறை இங்குதான் இருக்கப் போகின்றது.

எங்களது வளர்ச்சி இங்கு மாத்திரம் போதாது. எமது குடும்பத்தினரை மாத்திரம் பார்த்துக்கொண்டிருப்பது போதாது. எமது தாயகத்திலும் முக்கியமான கடமைகள் உள்ளன. அந்த கடமையை நாங்கள் அனைவரும் செய்து வருகின்றோம். என்னும் சேய்வோம். எமது கடமைகளைப்பற்றி மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்.

தமிழ் மக்கள் தனி உரிமையுடனும், பெருமையுடனும் வாழ்வதற்கான எமது கடைமை தாயகத்தைநோக்கி இருக்க வேண்டும்.

கனடா எப்பொழுதும் தமிழ் மக்களுக்கு உறுதியான ஆதரவை வழங்கும். கனடா தொடர்ச்சியாக தமிழ்மக்களுக்காக சர்வதேச ரீதியில் குரல் கொடுக்கும்.” – என்றார்.